MC.11/2024

20.01.2026

RW1 – சங்கர் த/பெ.சின்னகுழந்தை, வயது–50.

விசாரணை தொடங்கப்பட்ட நேரம் – 03.36 P.M.

விசாரணை முடிக்கப்பட்டநேரம் – 04.01 P.M.

Solemnly affirmed by Selvi.M.K.Anusha,M.L., Chief Judicial Magistrate, Tirupathu in accordance with the provision of Act X of 1873 of the day of 20.01.2026

<u>மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:-</u>

மனுதாரர் உங்களுடைய மனைவி என்றால் சரிதான். மனுதாரர் ஏற்கனவே ஜீவனாம்சம் கோரி ஜீவனாம்ச வழக்கு எண்.17/2020 தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். மேற்படி வழக்கு நிலுவையில் இருந்தபோது மனுதாரருக்கும் உங்களுக்கும் ஏற்பட்ட சமாதானத்தில் நீங்கள் மனுதாரருடன் சேர்ந்து வாழ்வதாக சொல்லி அந்த வழக்கு மனுதாரர் திரும்ப பெற்றுக்கொண்டார் என்றால் சரிதான். ஜீவனாம்ச வழக்கு எண்.17/2020 முடிவுற்ற பிறகு நீங்களும் மனுதாரரும் ஆறு மாத காலம் சேர்ந்து வாழ்ந்தீர்கள் என்று சொன்னால் இல்லை ஒரு மாத காலம் தான் சேர்ந்து வாழ்ந்தோம். மனுதாரருக்கு ஜீவனாம்சம் கொடுக்க கூடாது என்ற காரணத்தினால் தான் மனுதாரரின் இரண்டு மகள்கைளையும் நீங்கள் அழைத்துக்கொண்டு சென்றுவிட்டீர்கள் என்று சொன்னால் இல்லை மகள்களே விரும்பி தான் என்னுடன் வந்துவிட்டார்கள். இரண்டு மகள்களையும் நீங்கள் சரிவர பராமரிக்காமல் உள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல நான் நன்கு தான் அவர்களை பராமரித்து வருகிறேன். ஒவ்வொரு மகள்களுக்கும் தலா எவ்வளவு ஒரு மாதத்திற்க பராமரிப்புக்காக செலவு செய்து வருகிறீர்கள் என்று சொன்னால் நான் கூலி வேலை தான் செய்கிறேன். சாப்பாடுக்கு மட்டும் தலா ரூ.5000/–

ஒவ்வொரு மாதம் அவர்களுக்காக செலவு செய்கிறேன். நீங்கள் உங்கள் மனைவியின் நடத்தையின் மீது சந்தேகப்பட்டு பலமுறை அவரை அடித்து காயப்படுத்தி உள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. உங்களுடைய கொடுமையை தாங்க முடியாமல் மகளிர் காவல் நிலையத்தில் மனுதாரர் உங்களுக்கு எதிராக புகார் கொடுத்திருந்தார் என்று சொன்னால் தவறான சங்கதியாகும். நீங்கள் வெளியே எங்கேயாவது சென்றால் உங்கள் மனைவியை வீட்டிற்குள் அடைத்து கதவை பூட்டி சாவியை உங்களுடன் வைத்துக்கொண்டு சென்றுவிடுவீர்கள் என்று சொன்னால் தவறான சங்கதியாகும். உங்களுக்கு சந்தேக வியாதி வந்து மருத்துவ சிகிச்சைக்கு நீங்கள் ஒத்துழைக்க மறுத்து வருகிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல. உங்கள் மனைவி மளிகை கடைக்கும் நியாயவிலை கடைக்கும் பொருட்களை வாங்க சென்றால் அந்த கடையில் உள்ள நபரை நீங்கள் சந்தேகப்பட்டு சண்டை போடுகிறீர்கள் என்று சொன்னால் தவறான சங்கதியாகும். மனுதாரர் நல்ல உடை அணிந்தாலும் அவரின் நடத்தையின் மீது சந்தேகப்பட்டு அவருடன் சண்டை போடுகிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல. உங்கள் முதல் விசாரணை சாட்சியத்தில் மனுதாரருடன் சேர்ந்து வாழ்வதற்கு தயாராக உள்ளதாக சொல்லும் நீங்கள் அதற்காக மனு ஏதேனும் தாக்கல் செய்தீர்களா என்றால் இல்லை. நீங்கள் மனுதாரருடன் எந்த காலத்திலும் சண்டையிடவில்லை என்ற பொய்யான சாட்சியத்தை முதல் விசாரணை சாட்சியத்தில் சொல்லியுள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. மனுதாரர் காயத்ரி கார்மெண்சில் பணிபுரிந்து மாதம் ரூ.13,000/- சம்பாதித்து வருவதற்கு ஆதாரம் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை. நான் ஆதாரம் வாங்க சென்றதற்கு என்னை ஆள் வைத்து அடிக்க முயற்சிக்கிறார். தற்போதும் நீங்கள் தான் மனுதாரரின் வீட்டிற்கு சென்று அவருடைய பெற்றோருடன் சண்டை போடுகிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் மனுதாரருடன் திருமணம் நடந்த பிறகு மனுதாரர் வீட்டிற்கு சென்றதில்லையா என்றால் கடந்த பதினைந்து ஆண்டு காலமாக சென்றதில்லை. கடந்த பதினைந்து ஆண்டுகாலமாக மனுதாரர் வீட்டிற்கே செல்லாத நீங்கள் எந்த இடத்தில்

வைத்து அவரை சேர்ந்து வாழ கோரி அழைத்தீர்கள் என்று சொன்னால் வெளியே வைத்து தான் அழைத்தேன். உங்களுடைய முதல் விசாரணை சாட்சியத்தில் உங்கள் மனைவியின் மீது எந்த குற்றச்சாட்டையும் நீங்கள் சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். நீங்கள் மனுதாரர் இருவரும் சேர்ந்து சம்பாதித்த தொகையில் தான் ஒன்றரை ஏக்கர் நிலம் கிரயம் பெற்று அதன் தற்போதைய மதிப்பு ரூ.50,00,000/–கும் கூடுதல் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி அசையா சொத்து உங்களுடையது என்று சொன்னால் இல்லை என் தகப்பனாருடையது. உங்களுடைய பெற்றோர்கள் தங்களுடைய பராமரித்தல் செலவினை அவர்களுடைய நிலத்தில் வரும் வருமானம் மூலம் பார்த்துக்கொள்கிறார்கள் என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் யார் யாரை வைத்து பஞ்சாயத்து பேசினீர்கள் என்று சொன்னால் செல்வம், ஊர் நாட்டாண்மைக்காரர். நீங்கள் மாடு வியாபாரம் மூலமாக மாதம் ரூ.10,000/– சம்பாதித்து வருகிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் விவசாயம் மூலமாக மாதம் ரூ.50,000/– சம்பாதித்து வருகிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் விவசாயம் மூலமாக ஆண்டுக்கு ரூ.2,50,000/– சம்பாதித்து வருகிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல. உங்களுடைய சந்தேக குணத்தினால் மற்றும் கொடுமையினாலும் தான் உங்கள் மனைவி உங்களுடன் வாழ மறுத்து வருகிறார் என்றால் சரியல்ல. உங்கள் மனைவிக்கு உடல் நிலை சரியில்லாத காரணத்தினால் தான் மருத்துவ செலவு தேவைப்படுகிறது எனவும் நீங்கள் உங்கள் மனைவியை பராமரிக்க கடமைப்பட்டுள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. உங்கள் முதல் விசாரணை சாட்சியத்தில் உங்கள் மனைவி பதிமூன்று சவரண் நகை எடுத்துக்கொண்டு சென்றுவிட்டதாக பொய்யான சங்கதி சொல்லியுள்ளீர்கள் என்றும் அந்த நகைகள் உங்கள் வசம் தான் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் உங்கள் மனைவியை பராமரிப்பதிலிருந்து தப்பிப்பதற்காக வேண்டி மனுவிற்காக உங்கள் மனைவியுடன் சேர்ந்து வாழ விருப்பம் உள்ளதாக பொய்யான சங்கதி சொல்லுகிறீர்கள்

**என்று சொன்னால் சரியல்ல. என் குழந்தைகளுக்கு திருமணம் செய்யவேண்டும் அதன் காரணமாக மனுதாரர் வந்தால் நான் சேர்ந்து வாழ தயாராக உள்ளேன்.**

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

M K
ANUSHA

Chief Judicial Magistrate
Digitally signed by M K ANUSHA
DN: cn=M K ANUSHA,
ou=GOVERNMENT OF
TAMILNADU, o=TAMIL NADU
STATE JUDICIAL SERVICE,
st=Tamil Nadu, c=IN
Location: Tirupathur
Date: 2026.01.20 16:44:18
+0530

Chief Judicial Magistrate,
Tirupathur.